[1993 மார்ச் 23

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தினுடைய பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் மூலமாக அரசுக்கு அனைவரும் பரிந்துரை செய்திருக்கிறோம். பாதுகாப்பைப் பொறுத்தவரை காஷ்மீர், பஞ்சாப் போன்ற தீவிர வாதிகளை கோவை மத்திய சிறையிலே அடைத்து வைத்திருப்பதும், பாதுகாப்புக் குறித்து நகரத்தின் மையப் பகுதியிலே இந்த சிறைச்சாலை இருப்பது என்பது ஆரோக்கியமான சூழ்நிலை அல்ல. ஆகவே கோவைக்கும், பெரியார் மாவட்டத்திற்கும் இடையில் புறநகர்ப் பகுதியிலே மிக விரைவாக இந்த சிறைச் சாலையை அமைப்பதில் அரசு முன்வருமா, அந்த அளவில் செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவைகளை மனதிலே வைத்துக் கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலனை செய்ய ஆணையிட்டிருக்கிறார்கள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்— தொடர்ச்சி

145—

மேலூர் அரசு மருத்துவமனையில் கூடுதல் படுக்கைகள் அமைத்தல்.

*9016—திரு. க. வெ.வீ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் தொகுதி, மேலூர் அரசு மருத்துவமனைக்குக் கூடுதலாக 100 உள்நோயாளி சிகிச்சைக்குப் படுக்கைகள் ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மேலூர் அரசு மருத்துவமனைக்கு கூடுதலாக 100 உள்நோயாளி சிகிச்சைக்கு படுக்கைகள் ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.